

# இலங்கையில் செஞ்சிலுவை சர்வதேசக் குழு

சுருக்கக் குறிப்பு

ICRC

# எமதுபணி

செஞ்சிலுவை சர்வதேசக் குழு 1989ம் ஆண்டில் தமது பணிகளை இலங்கையில் ஆரம்பிக்கும்போது, மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பின்னர் அரசாங்கத்திற்கும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவுவதாக அமைந்திருந்தது. இன்று எமது கவனமெல்லாம் மோதல்களின் பின்னர் எழுந்துள்ள மனிதாபிமான தேவைகளை நிறைவேற்றுதாகும்.

தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் பெற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கும் செயற்பாடுகளுக்கு நாம் அறிவுரை கூறிவருகின்றோம். இவ்வாறான குடும்பங்களின் உளவியல், சமூக, சட்ட, நிர்வாக மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்கு உதவும் வகையில் நாடு பூராகவும் ஒரு துணைநிற்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றோம். கைதிகள் நடத்தப்படும் விதத்தையும், சுகாதார சேவையை பெறுதல் உள்ளிட்ட அவர்களின் வாழும் நிலைமைகளையும் விருத்திசெய்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உதவும் நோக்கில் தடுப்புக்காவல் நிலையங்களுக்கு சென்று வருகின்றோம். சிறைகளில் நிலவும் இடநெருக்கடிகளில் உதவிட சிறிய அபிவிருத்தி வேலைகளினுடாக அரசாங்கப் பங்காளருக்கு உதவிவருகின்றோம்.

புலம்பெயர்வில் மக்கள் உயிரிழக்கும் போது, அவர்களின் எச்சங்கள் தொழில்வாண்மையுடனும், கௌரவத்துடனும் கையாளப்பட வேண்டியுள்ளது. தடயம்சார் ஆற்றலை விருத்தி செய்துகொள்வதற்காக நாம் மருத்துவத் துறையினருக்கு உதவி வருவதோடு, தடயவியல் தொடர்பான கொள்கை மட்டக் கலந்துரையாடல்களுக்கும் பங்களிப்பு வழங்கி வருகின்றோம்.

ஆயுதப் படைகள், அதிகாரத்தரப்பினர், சிவில் சமூகம், கல்வியலாளர் போன்ற தரப்புக்கள் மத்தியில் சர்வதேச மனிதநேய சட்டம் பற்றிய அறிவை மேம்படுத்தி பலப்படுத்தி வருகின்றோம். அத்தோடு, தேடல், கைது மற்றும் தடுத்துவைத்தல் வழிமுறைகள் தொடர்பான சர்வதேச சட்ட தரநியமங்களை பிரயோகிப்பதற்குரிய பயிற்சியை பொலிசாருக்கு வழங்கி வருகின்றோம்.
எமது தேசிய பங்காளியான இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் சேர்ந்து சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கத்தின் பணிக்கு முக்கியமாக விளங்கும் உலகலாவிய மனிதநேயக் கொள்ககளை நாம் மேம்படுத்தி வருகின்றோம்.



# காணாமல் போனவர்களின் குடும்பங்களது தேவைகளில் உதவுதல்

கடந்தகால மோதல்களின்போது நாம் காணாமல்போனவர்களின் குடும்பங்களிடமிருந்து 34,000 இற்கும் மேற்பட்ட தேடுதல் கோரிக்கைகளை நாம் பதிவுசெய்தோம். தற்போது எம்மிடம் நாடளாவிய ரீதியில் 16,000 இற்கும் மேற்பட்ட கோரிக்கைகள் உள்ளன. இவற்றில் சில கோரிக்கைகள் 1990ம் ஆண்டுகளை சார்ந்தவையாகும். ஒவ்வொரு கோரிக்கைகள் தொடர்பில் நாம் குடும்பங்களை மீண்டும் தொடர்புகொண்டு வருகின்றோம்.

2014ம், 2015ம் ஆண்டுகளில் காணாமல்போன பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் உள்ளிட்ட காணாமல்போனவர்களின் 395 குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் தேவைகளை நன்கு விளங்கிக் கொள்வதற்காக நாடளாவிய ரீதியில் ஒரு குடும்பத் தேவை பற்றிய மதிப்பீட்டாய்வை நாம் மேற்கொண்டோம். அதன் பின்னர் இந்த மதிப்பீட்டாய்வின் விரிவான கண்டுபிடிப்புக்களும், பரிந்துரைகளும் அதிகாரிகளுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

இந்தக் குடும்பங்களில் பெரும்பாலானவர்களின் அதீத விருப்பம் காணாமல்போன தமது விருப்பத்திற்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்வதும், உணர்வுரீதியான ஆதரவைப் பெற்றுக்கொள்வதுமாகும். மேலும், தமது வாழ்வாதாரத்தை மீண்டும் புதுப்பித்துக்கொள்ள விரும்பும் இவர்கள், நிர்வாக மற்றும் சட்டரீதியான சிக்கல்களை சமாளிக்க வேண்டியுள்ளது. உள்நாட்டு நிறுவனங்களுடன் சேர்ந்து ஒரு நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக இவை அனைத்திற்கும் உதவிவருகின்றது.

காணாமல்போனவர்களின் குடும்பங்கள் அறியமுடியாத இழப்புக்களை சந்திக்கின்றனர். இது அவர்களின் நிச்சயமற்ற வாழ்வின் நிலையை எடுத்துக்காட்டுகின்றது. இதனை உளவியல் மற்றும் உளவள பாடத்திட்டத்தில் சேர்துக்கொள்ளும் நோக்குடன் இந்த எண்ணக்கரு பற்றிய வழிப்புணர்வை அதிகரிப்பதற்காக பல்கலைக்கழகங்களில் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவானது விரிவுரைகளை நடத்துகின்றது. காணாமல்போனவர்களின் குடும்பங்கள் விடைகளை காத்திருக்கும் வேளையில், உணர்வுரீதியான ஆதரவை வழங்குவதற்கு இந்த அறியமுடியாத இழப்புக்களை புரிந்துகொள்வது முக்கியமாகும். காணாமல்போனவர்களுக்கு இறப்புச் சான்றிதழுக்கு பதிலீடாக காணாமல் போனமைக்கான சான்றிதழை அறிமுகப்படுத்த செஞ்சிலுவை சர்வதேசக் குழுவானது இலங்கையில் அதிகாரத்தில் உள்ள நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றியது. காணாமல்போனவர்கள் தொடர்பில் பின்பற்றக்கூடிய சட்டங்கள் பற்றிய நிபுணத்துவ வழிகாட்டலையும், மனித எச்சங்களை அடையாளம் காணும் விஞ்ஞானரீதியான செயற்பாடுகள் பற்றிய வழிகாட்டலையும் நாம் கோரிக்கையின் போது வழங்கி வருகின்றோம்.



T.Zaharan/ICRC

# கைதிகள் நடத்தப்படும் விதத்தையும், அவர்களது நிலைமைகளையும் முன்னேற்ற அதிகாரிகளுக்கு உதவுதல்

1989ம் ஆண்டிலிருந்து நாம் இலங்கையிலுள்ள கைதிகளை சென்று பார்த்து வருகின்றோம். அப்போது, மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியுடனும், அதனைத் தொடர்ந்து மோதல்களுடன் தொடர்புடையதாக சந்தேகித்து தடுத்துவைக்கப்பட்டவர்களையும் சென்றுபார்த்தோம். இன்று நாம் தடுப்புக் காவல் நிலையங்களில் உள்ள அனைத்து கைதிகளையும் சென்று பார்க்கின்றோம். இந்த விஜயங்களின் மூலம் பெறப்படும் கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் தடுப்புக்காவல் சார் அதிகாரிகளுடன் மட்டும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. கைதிகள் நடத்தப்படும் விதத்தையும், அவர்களது நிலைமைகளையும் விருத்தி செய்தல், கைதிகளுக்கான சட்ட உத்தரவாதங்களை மதித்தல் ஆகிய நோக்கங்களுக்காக இவை அதிகாரிகளுடன் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. நாம் சிறைச்சாலைகளுக்குள் சிறிய அளவிலான உட்கட்டமைப்பு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதோடு, இடநெருக்கடிப் பிரச்சினையைத் தீர்த்து, கைதிகளுக்கான சிறைச்சாலை சுகாதார சேவைகளை விருத்தி செய்வதற்காக அதிகாரிகளுடன் சேர்ந்து பணியாற்றி வருகின்றோம்.

நாம் உள்நாட்டில் செயலமர்வுகளையும், சர்வதேச கருத்தரங்குகளையும் ஒழுங்குபடுத்துதோடு சிறைச்சாலை அதிகாரிகளின் பங்கேற்புக்கு அனுசரணை வழங்கி வருகின்றோம். அவர்களின் தொழில்நுட்ப ஆற்றலை கட்டியெழுப்பி மிகச் சிறந்த நடைமுறைகளை பரிமாறிக்கொள்வதற்கு வசதியளிப்பதே இதன் நோக்கமாகும். சிறையில் ஏற்படும் இடநெருக்கடி பற்றிய சட்ட மற்றும் நீதிசார் சிக்கலை தீர்ப்பதற்காக ஒரு தேசிய செயலணியை உருவாக்குவதற்கு நாம் பங்களிப்புச் செய்தோம். சிறைச்சாலைகள் சீர்த்திருத்த அமைச்சு மற்றும் நீதி அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்கள் இணைத்தலைமை வகிக்கும் இந்த செயலணி 2016ம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அதேவேளை, அதன் அதிகாரவரம்பானது இடநெருக்கடிக்கு மேலதிகமாக சிறைச்சாலை சீர்திருத்தத்தை மேற்கொள்ளும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது.

செஞ்சிலுவை தகவல் பரிமாற்றத்தின் ஊடாகவும், தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களை சென்று பார்ப்பதற்காக ஓர் பயணக் கொடுப்பனவை அந்தக் குடும்பங்களுக்கு வழங்குவதன் மூலமும் தமது விருப்பத்துக்குரியவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ள நாம் கைதிகளுக்கு உதவி வருகின்றோம். அத்தோடு, அவசர நிலைமைகளில் கைதிகளுக்கு குறிப்பிடத்தக்க உதவிகளை வழங்கி வருவதோடு, பொழுதுபோக்கு மற்றும் கல்விசார் பொருட்களையும் வழங்கி வருகின்றோம்.



F.Dufour/ICRC

# தடயம்சார் ஆற்றலைப் பலப்படுத்தல்

உலகம்பூராகவும், யுத்தம், அனர்த்தங்கள் அல்லது புலம்பெயர்வினால் மக்கள் உயிரிழக்கும்போது அவர்களின் எச்சங்கள் தொழில்வாண்மையுடனும், கௌரவத்துடனும் கையாளப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக நாம் பணியாற்றி வருகின்றோம். இலங்கையில் நாம் தடயம்சார் தொல்பொருளியல் மற்றும் மானுடவியல் பயன்பாட்டின் ஊடாக மனித எச்சங்களை மீட்டு, பகுப்பாய்வு செய்து அடையாளம் காண்பது எப்படி என்பது குறித்து நீதியியல் மருத்துவப் பணியாளர்களுக்கு

பயிற்சியளித்து வருகின்றோம். மேலும் வெளிநாட்டில் தடயவியலில் பயிற்சிபெறுவதற்காக அவர்களுக்கு நிதியுதவி செய்து வருகின்றோம்.

அனர்த்தங்களின் பின்னர் சடலங்களை கையாளும் விடயத்தில் காணப்படும் சவால்களை சமாளிக்கும் வகையில் நடத்தப்படும் செயலமர்வுகளுக்கு நாம் அனுசரனை வழங்குகின்றோம். தடய மருத்துவ மற்றும் நச்சியல் நிறுவகத்துடன் சேர்ந்து தர உத்தரவாத பரீட்சார்த்த செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக, நாம் தற்போதுள்ள வசதிகளை விருத்தி செய்வதற்கும், ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கும், தடயம்சார் தரவுகளை திரட்டி, மத்தியப்படுத்தி, முகாமை செய்வதற்கும் ஏற்ற தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கி வருகின்றோம்.






# இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் சேர்ந்து பணியாற்றுதல்

கடந்தகால மோதல்கள் அல்லது இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பிரிந்துள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு இடையில் தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்தும் பொருட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் சேர்ந்து அதற்கு தேவையான நிதி, தொழில்நுட்ப மற்றும் பொருள் உதவிகளை செஞ்சிலுவை சர்வதேசக் குழு வழங்கிவருகின்றது. சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளையும், மனிதநேய விழுமியங்களையும் ஊக்குவிக்கும் விடயத்தில் தேசிய சங்கத்துடன் இணைந்து நாம் பணியாற்றி வருகின்றோம். அத்தோடு அதன் பணியாளர்கள் மற்றும் தொண்டர்களின் அவசர பதிலளிப்பு ஆற்றலையும், முதலுதவி திறன்களையும் விருத்தி செய்து வருகின்றோம். ஆபத்தான சூழ்நிலைகளில் தமது பாதுகாப்பை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் அடங்கிய பாதுகாப்பு அடைவு அணுகுமுறை பற்றியும் அவர்களுக்கு பயிற்சியளித்து வருகின்றோம்.




# மனிதநேயக் கொள்கைகளுக்கு மதிப்பளிப்பதை மேம்படுத்தல்

யுத்தம் மற்றும் ஏனைய வன்முறைகள் காரணமாக ஏற்படும் கஷ்டங்களையும், பாதிப்பையும் போக்குவதற்கான எமது உலகலாவிய முயற்சியின் ஓரங்கமாக நாம் ஆயுதப் படைகள், அதிகாரசபைகள், சிவில் சமூகம், கல்வியலாளர் போன்ற தரப்புக்கள் மத்தியில் சர்வதேச மனிதநேய சட்டம் பற்றிய அறிவை மேம்படுத்தி பலப்படுத்தி வருகின்றோம். அவர்களது பயிற்சிநெறிகளிலும், பாடத்திட்டத்திலும் மனிதநேய சட்டத்தின் கொள்கைகளை சேர்ப்பதற்காக அவர்களுக்கு உதவி வருகின்றோம். அந்த விடயம் தொடர்பான அவர்களின் விளக்கத்தை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளில் அவர்களின் உறுப்பினர்கள் பங்கேற்பதற்காக நிதியுதவி வழங்கி வருகின்றோம். ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் செயற்பாடுகளில் ஒரு பங்களிப்பாளராக இலங்கை வகிக்கும் வகிபாகத்தின் அடிப்படையில் நாம் வெளிநாட்டில் அமைதிகாக்கும் பணியில் ஈடுபடுத்தப்படும் படை உறுப்பினர்களுக்கும், கடற்பாதுகாப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் கடற்படை உறுப்பினர்களுக்கும் மனிதநேய சட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் பயிற்சி அமர்வுகளை நடத்தி வருகின்றோம். பயங்கரவாத விசாரணைப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம், இலங்கை பொலிஸின் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் என்பவற்றுக்கு படைப்பலத்தையும், ஆயுதங்களையும் சரியாகப் பயன்படுத்துதல் தேடல், கைது மற்றும் தடுத்துவைத்தல் வழிமுறைகள் தொடர்பான சர்வதேச தரநியமங்கள் என்பவற்றை உள்ளடக்கும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் பற்றிய பயிற்சிகளையும் வழங்கி வருகின்றோம்.

சட்டத்துறையில் பட்டப்படிப்பை பயின்றுவரும் மாணவர்களுக்காக ஒரு வருடாந்த தேசிய வழக்காடு மன்ற போட்டியை ஒழுங்கு செய்கின்றோம். சர்வதேச குற்றவியல் நீதிமன்ற சூழமைவில் சர்வதேச சட்டத்தை எப்படிப் பிரயோகிப்பது பற்றி அவர்கள் விளங்கிக் கொள்வதற்கு இது உதவும்.

உலகம்பூராகவும் யுத்தம் மற்றும் ஏனைய வன்முறைகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு செஞ்சிலுவை சர்வதேசக் குழு உதவி வருகின்றது. பாதிக்கப்படும் மக்களின் கௌரவத்தை பாதுகாப்பதுடன் அவர்களின் துன்பங்களை குறைக்கவும் முயற்சிகளையும் செஞ்சிலுவை மற்றும் செம்பிறை பங்காளிகளுடன் சேர்ந்து செஞ்சிலுவை சர்வதேசக் குழு மேற்கொண்டு வருகின்றது. மேலும் மனிதநேய சட்டத்தை மேம்படுத்தி பலப்படுத்துவதன் மூலமும், உலகலாவிய மனிதநேய கொள்கைகளை ஊக்குவிப்பதன் மூலமும் மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை இந்த நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.


facebook.com/icrc
twitter.com/icrc
instagram.com/icrc

செஞ்சிலுவை சர்வதேசக் குழு
29, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05
இலங்கை
தொலைபேசி: + 94 (11) 250 33 46 தொலைநகல்: + 94 (11) 250 33 48
மின்னஞ்சல் : colombo@icrc.org www.icrc.org

வவுனியா அலுவலகம்,
70, வைரவர் கோவில் வீதி,
வைரவர்புளியங்குளம், வவுனியா
தொலைபேசி : +94 (0)24 222 28 55 தொலைநகல்: +94 (0)24 222 25 37

மட்டக்களப்பு அலுவலகம்
மன்ரெஸா வீதி, கொத்துக்குளம், பிள்ளையாரடி
மட்டக்களப்பு
தொலைபேசி : +94 (0) 65 222 70 70


ICRC


0117/250 11.2017 1000 Cover photo: Tuan Zaharan